**செ. கு. எண்**: 255 **நாள்**: 20.07.2012

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

# அறிக்கை – 20.7.2012

சென்னை, ஆவடி, வீராபுரம், தமிழ்நாடு சிறப்பு காவல்படை மூன்றாம் அணியில் இரண்டாம் நிலை காவலராகப் பணிபுரிந்து வந்த திரு. ச. தமிழ்வேந்தன் அவர்கள் 13.7.2012 அன்று மதுரை மாவட்டம், சமயநல்லூர் ரயில்வே நிலையத்தில் ரயிலில் அடிபட்டு உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

நாகப்பட்டினம் மாவட்டம், மயிலாடுதுறை போக்குவரத்துக் காவல் நிலைய பிரிவில் தலைமைக் காவலராகப் பணிபுரிந்து வந்த திரு. என். அறிவழகன் அவர்கள் 12.7.2012 அன்று மாரடைப்பு ஏற்பட்டு, மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி 13.7.2012 அன்று உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

கோயம்புத்தூர் மாவட்டம், மேட்டுப்பாளையம் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணிபுரிந்து வந்த திரு. சா. எபினேசர் அவர்கள் உடல்நிலை குறைவு காரணமாக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு, சிகிச்சை பலனின்றி 14.7.2012 அன்று உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வு வாரியத்தில் ஓட்டுநராகப் பணிபுரிந்து வந்த முதல் நிலை காவலர் திரு. வே. ஜெகன்நாதன் அவர்கள் 16.7.2012 அன்று கல்பாளையம், செங்குன்றம் சாலையில் தனது இரு சக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்த போது சாலை விபத்து ஏற்பட்டு, மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு, சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார் என்ற செய்தியையும் அறிந்து நான் மிக்க துயரம் அடைந்தேன்.

காவல் துறை இரண்டாம் நிலைக் காவலர் திரு. தமிழ்வேந்தன், தலைமை காவலர் அறிவழகன், சிறப்பு உதவி ஆய்வாளர் எபினேசர் மற்றும் முதல் நிலை காவலர் ஜெகன்நாதன் ஆகியோரின் அகால மரணத்தால் சொல்லொணாத் துயரத்தில் ஆழ்ந்திருக்கும் அவர்களது குடும்பத்தாருக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், ரயில் விபத்தில் காலமான இரண்டாம் நிலைக் காவலர் திரு. ச. தமிழ்வேந்தன், மாரடைப்பால் காலமான தலைமைக் காவலர் திரு. என். அறிவழகன், உடல்நிலைக் குறைவால் காலமான சிறப்பு உதவி ஆய்வாளர் திரு. சா. எபினேசர், சாலை விபத்தில் காலமான முதல் நிலை காவலர் திரு.வி. ஜெகன்நாதன் ஆகியோரின் குடும்பங்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா இரண்டு லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**

தமிழக முதலமைச்சர்

**வெளியீடு: –**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**